

தமிழ்நாடு முதலமைச்சர்,கழகத் தலைவர் தலைமையில் தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் பி.பழனியப்பன் அவர்களின் இல்லத்திருமணம் நடைபெறுகிறது. அவ்விழ நடைபெறும் இடம் மற்றும் ஏற்பாடுகளை பொதுப்பணி,நெடுஞ்சாலை மற்றும் சிறுத்துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில் பார்வையிட்டார். உடன் எழில்மறவன் மற்றும் பலர் உள்ளனர்.



திருப்பூர் மாவட்டம், காங்கேயம் ஒன்றியம், பழையகோட்டை ஊராட்சி, நல்லம்மாள்புரத்தில் ரூ.80.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய சமுதாயக்கூடம் மற்றும் உணவுக்கூடம் அமைக்கும் பணியினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக துணைப் பொதுச் செயலாளர் மு.பெ. சாமிநாதன் துவக்கி வைத்தார். இதில் வெளிநாடு வாழ் தமிழர் நலவாரிய தலைவர், கழக சுற்றுச்சூழல் அணி செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி, திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் இல.பத்மநாபன், காங்கேயம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் சி.கருணை பிரகாஷ் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை

# தமிழ்நாடு முழுவதும் நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாகக் கொண்டாடுவோம்!

## தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை,நவ.16-

தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாநில நிர்வாகிகள் - மாவட்ட மாநகர அமைப்பாளர்கள் & தலைவர்கள் ஆலோசனைக் கூட்டம் செயலாளர் டாக்டர். அ.சுபேர் கான். அவர்களின் தலைமையில் நடைபெற்றது.



சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் 13.11.2025 அன்று தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு மாநில நிர்வாகிகள் - மாவட்ட மாநகர அமைப்பாளர்கள் & தலைவர்கள் ஆலோசனைக்கூட்டம் அதன் மாநிலச் செயலாளர்; தமிழ்நாடு வக்ஃபு வாரிய உறுப்பினர் டாக்டர்.அ.சுபேர் கான் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தின், தீர்மானங்களாக, இஸ்லாமியர் மற்றும் கிறிஸ்துவ மக்களின் கோரிக்கையை ஏற்று திருவள்ளூர், பெரம்பலூர், தேனி, சிவகங்கை, விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான கபரஸ்தான் மற்றும் கல்லறை அமைக்க நிலம் ஒதுக்கீடு செய்த கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு அனைத்து சிறுபான்மையின மக்களின் சார்பாகவும் மனமார்ந்த நன்றி தெரிவிக்கப்பட்டது.

பழமை வாய்ந்த தேவாலயங்களை புனரமைக்க வேண்டி ரூ.10.0 (பத்து) கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ள சிறுபான்மையின மக்களின் ஒரே பாதுகாவலர் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இக்கூட்டத்தின் வாயிலாக மனமார்ந்த நன்றியை தெரிவிக்கப்பட்டது.

ஜனநாயகத்தின் அடித்தளமான மக்களாட்சியின் மாண்புகளை சீர் குலைத்திடும் வகையில் தேர்தல் ஆணையத்தை தனது கைப்பாவையாக மாற்றி சிறப்பு தீவிர வாக்காளர் திருத்தம் SIR(Special Intensive Revision) எனும் பெயரால் இஸ்லாமிய, கிறித்துவ மற்றும் அடித்தட்டு மக்களின் அடிப்படை உரிமையும் ஜனநாயக கடமையுமான வாக்களிக்கும் உரிமையை பறிக்கத்துடிக்கும், வாக்குத்திருட்டு பாசிச பா.ஜ.க. விற்கும், அதற்கு துணைபோகும் விதமாக செயல்பட்டுக்கொண்டிருக்கும் தமிழர் விரோத அடிமை அ.தி.மு.க விற்கும் இக்கூட்டத்தின் வாயிலாக கடுமையான கண்டனத்தை தெரிவிக்கப்பட்டது.

“SIR என்ற பெயரில் நம் வாக்குரிமையைப் பறிக்கும் ஆபத்து வாசல் தேடி வந்துவிட்டது. தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைக் காக்க திமுக உங்கள் தோழனாக துணை நிற்கும். அனைவரும் ஒன்றிணைந்து விழிப்புடன் செயல்பட்டு தமிழ்நாட்டில் ஜனநாயகப் படுகொலை நடக்காமல் நம் வாக்குரிமைப் பாதுகாப்போம்!” என உரிமை முழக்கமிட்டிருக்கும் சிறுபான்மையின மக்களின் நலன் காத்திடும் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் கரங்களை வலுப்படுத்திட உறுதியேற்றனர்.

தி.மு.கழகம் துவங்கிய நாள் முதல் இதுநாள் வரை சிறுபான்மையின மக்களின் நலனுக்காக கொண்டு வந்த சட்டங்கள் மற்றும் திட்டங்களின் சாதனை தொகுப்பை “அன்றும்!.இன்றும்!. என்றும்!. சிறுபான்மையின மக்களின் காப்பான் தி.மு.க” எனும் தலைப்பில் நமது தி.மு.கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் சார்பில் கொண்டு வரப்பட்ட வரலாற்று ஆவணத்தை,

தனது பொற்கரங்களால் வெளியிட்டு பெருமை சேர்த்த தமிழ்நாடு முதல்வர் கழகத் தலைவர் அவர்களுக்கு இக்கூட்டத்தின் வாயிலாக நன்றிகளை தெரிவித்து,

தி.மு.க சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு சார்பில் கொண்டு வரப்பட்டுள்ள “அன்றும்!. இன்றும்!. என்றும்!. சிறுபான்மையின மக்களின் காப்பான் தி.மு.க” எனும் இப்புத்தகத்தை அனைத்து சிறுபான்மையின மக்களின் கைகளிலும் கொண்டு சேர்க்கும் பணியை, கடமையாக கருதி செயலாற்ற தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

சமூக நீதி - சமத்துவம் - சகோதரத்துவம் எனும் உயிர்மூச்சுக் கொள்கைகளை அடித்தளமாகக் கொண்டு 75 ஆண்டுகளாக தமிழ்நாட்டின் மண் - மொழி - மானம் காக்கும் பேரியக்கமாம் நம் தி.மு.கழகத்தின் பவள விழா நிறைவை 1,120 பக்கங்கள் கொண்ட புத்தகம், 44 கருத்தாளர்கள் பங்கேற்ற கருத்தரங்கம் மற்றும் முற்போக்கு புத்தகக் காட்சி என `அறிவுத் திருவிழாவாக' கொண்டாடிய தி.மு.கழக இளைஞர் அணிச் செயலாளர்; துணை முதல்வர் இளம் தலைவர் அவர்களுக்கு கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் சார்பில் வாழ்த்துகளும், பாராட்டுகளும் தெரிவித்துக் கப்பட்டது.

மாநில உரிமைகளை அடகு வைத்து பாசிசத்துக்கு துணை போகும் அடிமைகளையும், கொள்கையற்ற கூட்டங்களையும் புறந்தள்ளி தாழ்ந்துகிடந்த தமிழ்நாட்டை தலைநிமிர்த்திய நம் தி.மு.கழகத்தின் பவழ விழாவை அறிவுத் திருவிழாவாக கொண்டாடி,

சமத்துவச் சமுதாயம் எனும் நம் கொள்கைப் பயணத்தை கழகத் தலைவர் - முதலமைச்சர் அவர்கள் தலைமையில் தொடர்வோம்! வெல்வோம்! வரலாறு படைப்போம்! என சூளுரைத்திருக்கும் இளம் தலைவர் அவர்களின் கரங்களை வலுப்படுத்திட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

‘எல்லார்க்கும் எல்லாம்’ என்ற இலட்சிய முழக்கத்தோடு செயல்படும் திராவிட மாடல் அரசிற்கு பக்க பலமாய் செயலாற்றி, திராவிட இயக்கக் கொள்கைகளை அடுத்த தலைமுறைக்கு கடத்தி வீறுகொண்ட இயக்கத்தின் நட்சத்திரமாக ஒளிரும் தமிழ்நாடு துணை முதலமைச்சர்; கழக இளைஞரணிச் செயலாளர் இளம் தலைவர் அவர்களின் பிறந்த நாளை,

கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு சார்பில் “சிறுபான்மையினர் போற்றும் இளம் தலைவர்” எனும் தலைப்பில் தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் கொண்டாடுவது என இக்கூட்டம் தீர்மானிக்கப்பட்டது.

அதுபோது, ஏழை எளிய சிறுபான்மையின மக்கள் மற்றும் மாணவச் செல்வங்களுக்கு தேவையான உதவிகளை செய்திடுமாறு அறிவுறுத்தப்பட்டது.

எதிர்வரும் 2026 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் பாசிச சக்திகளின் வாக்குத் திருட்டு சூழ்ச்சிகளை முறியடித்து, சிறுபான்மையின மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு கழகம் ஏழாவது முறையாக ஆட்சியமைக்க அயராது பாடுபடுவோம்.

எந்தக் கொம்பனாலும் கொள்கை தீரமிக்க தி.மு.கழகத்தை தொட்டுக் கூட பார்க்க முடியாது.

தமிழ்நாடு ஒருபோதும் தலைகுனியாது என்பதை உலகுக்கு உணர்த்துவோம்! வெல்வோம் இருநூறு! படைப்போம் வரலாறு! திராவிட மாடல் 2.0 அமைக்க சபதமேற்போம்! உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்நிகழ்வில் சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் மாநில நிர்வாகிகள் ஜோசப் ராஜ், சி.ஜெரால்டு, இரா.அன்வர்கான், என்.பி.எம்.சேக் அப்துல்லா, அடையாறு சபீல் கான், முனவர் ஜான், விஜயகுமார், நூருல்லா, கா.ரபி அகமது, அன்வர் அலி, ராபர்ட் ராஜதுரை, அனைத்து மாவட்ட, மாநகர தலைவர், அமைப்பாளர்கள், தலைவர்கள் மற்றும் திரளான நிர்வாகிகள் பங்கேற்றனர்.



கோவை தெற்கு மாவட்டம், கிணத்துக்கடவு சட்டமன்ற தொகுதி, வெள்ளலூர் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண் 3,4,5,6,10,11,13 க்குட்பட்ட பகுதிகளில் ரூபாய் 1.86 கோடி மதிப்பீட்டினால திட்டப் பணிகளை கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் துவக்கி வைத்தார். இதில் வெள்ளலூர் பேரூர் கழக செயலாளர் ராஜு, மதுக்கரை கிழக்கு ஒன்றிய செயலாளர் விஜய் சேகரன், பேரூர் கழகத் துணைச் செயலாளர் ஜெகதீஸ்வரன், பொதுக்குழு உறுப்பினர் ரகு துரைராஜ், மாவட்ட பிரதிநிதி கண்ணன், சின்ன காசு, ஒன்றிய பிரதிநிதி சாரங்கன், வார்டு செயலாளர்கள் மருதாசலம், ரமேஷ், முருகேசன், பிரேம், ஜோசப், கவுன்சிலர்கள் பெருமாள், கனகராஜ், கலை காளீஸ்வரி, நித்யா தேவி, குணா சுந்தரி, பச்சையம்மாள், பவித்ரா உள்பட கழக நிர்வாகிகள், துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



திருவாரூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட கொரடச்சேரி, தெற்கு ஒன்றியம், வடக்கு ஒன்றியம், கொரடச்சேரி பேரூர் ஆகிய பகுதிகளின் வாக்குச்சாவடி நிலை முகவர்களுக்கான பயிற்சி வகுப்பில், மாவட்டச் செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் அவர்களின் தலைமையில், மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் கேசவன், எஸ்.ஐ.ஆர். படிவம் குறித்த விளக்கங்களை எடுத்துரைத்தார். தேர்தல் பொறுப்பாளர் எஸ்.கே.வேதரத்தினம்,ஒன்றிய செயலாளர்கள் ஆர்.பாலச்சந்திரன், சேகர் கலியபெருமாள், பேரூர் செயலாளர் பூண்டி. கே.கலைவேந்தன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி பா.அரவிந்த், தொகுதி பொறுப்பாளர் வினோத் மற்றும் கழக நிர்வாகிகள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் கலந்து கொண்டனர்.

### அரியலூர் மேல்நிலைப் பள்ளியில்

# மாணவ- மாணவியர்க்கு விலையில்லா மிதிவண்டிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்!

*அரியலூர்,நவ.16-*

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அழகப்பா மாதிரி மேல்நிலைப்பள்ளியில் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கியதை தொடர்ந்து அரியலூர் மேல்நிலைப்பள்ளியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கினார்.



இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, கலந்து கொண்டார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காக பல்வேறுத் திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு உயர் தரமான கல்வியை கிடைக்கச் செய்து அவர்களது வாழ்வை முன்னேற்றும் வகையில் பள்ளிக் கல்வித்துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர், மிக பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை சார்பில் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் பொருளாதார சூழ்நிலையால் அவர்களது கல்வி எவ்வகையிலும் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் உள்ளிட்ட பல்வேறு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் 2025 -26ஆம் கல்வி ஆண்டில் அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் பகுதி நிதியுதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளில் 11ஆம் வகுப்பு பயின்ற மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் தமிழ்நாடு அரசின் சார்பில் துணை முதலமைச்சர் அமைச்சர் உதயநிதி ஸ்டா லின் அவர்கள் சிவகங்கை மாவட்டம், காரைக்குடி அழகப்பா மாதிரி மேல்நிலைப்பள்ளியில் நடை பெற்ற விழாவில் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்கள்.

இதன் தொடர்ச்சியாக அரியலூர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்.

அரியலூர் மாவட்டத்தில் உள்ள 64 அரசு மற்றும் அரசு உதவிப்பெறும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் 3,306 மாணவர்கள், 3,582 மாணவியர்கள் என மொத்தம் 6,888 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் வண்ணம் அரியலூர் அரசு மேல்நிலைப்பள்ளியில், சி.எஸ்.ஐ மேல்நிலைப் பள்ளி, நிர்மலா (பெ) மேல்நிலைப்பள்ளி மற்றும் அரியலூர் அரசு மேல்நிலைப் பள்ளிகளை சேர்ந்த 778 பள்ளி மாணவ, மாணவிகளுக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் அவர்கள் விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார்கள்.

விலையில்லா மிதிவண்டி திட்டத்தின்கீழ் பயன் பெற்ற அரியலூர் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவி காவியா தெரிவித்ததாவது,

எனது பெயர் காவியா. நான் அரியலூர் பெரிய தெருவில் வசித்து வருகிறேன். அரியலூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் 11ஆம் வகுப்பு பயின்று வருகிறேன். நான் தினமும் பள்ளிக்கு நடந்து வருகிறேன். இந்நிலையில் எனக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் விலையில்லா மிதிவண்டி வழங்கப்பட்டுள்ளது. இதன் பயனாக தினமும் பள்ளிக்கு சரியான நேரத்தில் சென்று வருவதுடன், மாலை பள்ளி முடிந்தவுடன் தாமதமின்றி விரைவாக வீட்டிற்கு செல்ல முடியும். நான் சிறந்த முறையில் கல்வி கற்க, சிரமமின்றி பள்ளிக்கு சென்று வரும் வகையில் விலையில்லா மிதி வண்டியை வழங்கி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அய்யா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன் என மாணவி காவியா தெரிவித்தார்.

விலையில்லா மிதிவண்டி திட்டத்தின்கீழ் பயன் பெற்ற அரியலூர் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவன் ஸ்ரீராம் தெரிவித்ததாவது,

எனது பெயர் ஸ்ரீராம். நான் அரியலூர் அரசு மேல் நிலைபள்ளியில் பயின்று வருகிறேன். தினமும் வீட்டிலிருந்து பள்ளிக்குச் சென்று வருகிறேன். சில நேரங்களில் சரியான நேரத்தில் பள்ளிக்கு வருவதில் தாமதம் ஏற்படுகிறது. இந்நிலையில் தமிழ்நாடு மு.க.ஸ்டாலின் முதலமைச்சர் அவர்கள் உத்தரவிற்கிணங்க 11ஆம் வகுப்பு பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின்கீழ் எனக்கு விலையில்லா மிதிவண்டி வழங்கப்பட்டுள்ளது. இதனால் தினமும் நான் பள்ளிக்கு மிதிவண்டியில் எளிதாக சென்று வருவதுடன், குறிப்பிட்ட நேரத்திற்கு தாமதமின்றி பள்ளிக்கு செல்வதுடன், வீட்டிற்கும் சரியான நேரத்திற்கு வர முடிகிறது. இதனால் எனது கல்வி தரம் மேம்பாடு அடைந்துள்ளது. அரசு பள்ளியில் பயிலும் என்னைப்போன்ற ஏழை, எளிய மாணவர்களும் சிரமமின்றி பள்ளிக்குச் சென்று கல்வி கற்கும் வகையில் விலையில்லா மிதி வண்டியை வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அய்யா அவர்களுக்கு எனது சார்பிலும், எனது குடும்பத்தின் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன் என மாணவன் ஸ்ரீராம் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், அரியலூர் நகர்மன்ற தலைவர் சாந்தி கலைவாணன், முதன்மைக்கல்வி அலுவலர் மா.ரேணு கோபால், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மை நலத் துறை அலுவலர் (பொ) பி.சுமதி, மாவட்டக்கல்வி அலுவலர் ஆ.பாலசுப்ரமணியன், நகர்மன்ற துணை தலைவர் கலியமூர்த்தி, நகர கழக செயலாளர் இரா.முருகேசன், ஒன்றிய பொறுப்பாளர் தெயவ.இளையராஜா, பொதுக்குழு உறுப்பினர் இரா.பாலு, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், அரசு அலுவலர்கள், பள்ளி மாணவ, மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**டாக்டர் துரை. கிருஷ்ணமூர்த்தி**
**நவம்பர் 16 (1999)**



**மருத்துவரான இவர், திராவிடக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.**

**1989ஆம் ஆண்டு சிதம்பரம் சட்டமன்றத் தொகுதியில், கழக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்று, தொகுதி வாழ் மக்களுக்காக பணிபுரிந்து அனைவரின் பாராட்டைப் பெற்றவர்.**

**தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும், தணிக்கைக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**